## தலைப்பு 157- தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சு மத விவகார அமைச்சு

**1. நிதிக்கூற்று**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிநிலைமை தொடர்பான கூற்று அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றுகை கூற்று மற்றும் நிதிப்பாய்ச்சல் கூற்றுகளுடன் ஒன்றிணைக்கப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட ஏற்பாடுகளுடன் இணைத்து சொல்லப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 154(1) உறுப்புரையில் உள்ளடங்கப்பட்ட விதிமுறைகளுக்கு அமைவாக எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் நிதிக் கூற்று தொடர்பாக எனது கருத்துக்களை வெளியிடல் மற்றும் மேற்பார்வைகள் உள்ளடங்கிய சுருக்க சாராம்ச அறிக்கை 2019 ஜுன்மாத 07 ஆம் திகதி பிரதான கணக்கிடுதல் உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம், அமைச்சிற்கு உட்பட்ட வருடாந்த தகவல்கள் உள்ளடங்கிய முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் மாதம் 13 ஆம் திகதி பிரதான கணக்கிடுதல் உத்தியோகத்தரிடம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு உறுப்புரை 154(6) உறுப்புரையுடன் இணைத்து சொல்லப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்கான தாக்கம் தவிர்ந்த, 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதிக் கூற்றுகளின் பிரகாரம் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்தினத்தின் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசெயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சலானது பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு மூலத்தத்துவங்களுக்கு அமைவாக உண்மை மற்றும் சாதாரண நிலைமையை பிரதிபலிப்பதாக உள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு தரப்படுத்தலுக்கு (இ.க.த) அமைவாக நான் கணக்காய்வு மேற்கொண்டுள்ளேன். நிதிக் கூற்று தொடர்பாக எனது பொறுப்பு ,கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. எனது கருத்துக்களுக்கான அடிப்படையை வழங்குவதை நோக்காகக் கொண்டு என் மூலம் பெறப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும், பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3. நிதிக்கூற்று தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு மூலத்தத்துவங்களுக்கு அமைவாக மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக உண்மை மற்றும் சாதாரண நிலைமையை பிரதிபலிப்பதற்கு அமைவாக நிதிக் கூற்று ஒழுங்கமைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய போதுமான தவறான வெளிப்பாடுகள் இன்றி, நிதிக்கூற்றுகளை ஒழுங்கமைப்பதற்கு ஏற்ற முறையில் அவசியமான உள்ளக நிர்வாகத்தினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் படி அமைச்சு மூலம் வருடாந்த மற்றும் நடைமுறை நிதிக்கூற்றுகளை ஒழுங்கமைப்பதற்கு ஏற்றால் போல தனிப்பட்ட சொந்த வருமானம், செலவு சொத்துக்கள் மற்றும் கடன் பொறுப்புகள் தொடர்பாக சரியான முறைமையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேனுதல்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) இ உப பிரிவின் படி அமைச்சின் நிதி நிர்வாகம் தொடர்பாக வினைத்திறனான உள்ளக நிர்வாக கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்படுவதுடன் அந்த கட்டமைப்பின் சிறப்புத்தன்மை தொடர்பாக முன்னரான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு ,அதற்கேற்ப அக்கட்டமைப்பினை வினைத்திறனான முறையில் கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

பொதுவாக நிதிவெளியீடானது மோசடி மற்றும் தவறுகள் மூலம் ஏற்படுகின்ற போதுமான தவறான வெளியீடுகள் இல்லாது சாதாரன நியாயத்தை உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது கருத்துகள் உள்ளடங்கிய கணக்காய்வாளர் சுருக்க அறிக்கை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயத்தை உறுதிப்படுத்துதலானது உயர் மட்டசான்றுப்படுத்துதல் என்பதாக இருப்பினும் இலங்கை கணக்காய்வுதரம் அடிப்படையில் கணக்காய்வு மேற்கொள்ளும் போது

எப்போதும் போதுமான வெளியீடுகள் அல்லாமல் எந்த உறுதிப்படுத்தலும் இருக்காது. மோசடி மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது குழுக்களாகவோ பாதிப்பதால் போதுமான வெளியீடுகள் ஏற்படுவதுடன் இந்த நிதிக் கூற்றுகளை அடிப்படையாகக் கொண்டு பயனர்கள் மூலம் பொருளாதார ரீதியாக தீர்மானம் மேற்கொள்ளும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டும்.

தொழில் நீதிமற்றும் தொழில் முறைக்கு அமைவாக இலங்கை கணக்காய்வு தர அடிப்படையில் என் மூலம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

- மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுகளில் ஏற்படக்கூடிய போதுமான தவறான வெளியீடுகளில் அபாயங்களை இனங்காணல் மற்றும் மதிப்பீடு மேற்கொள்ளும் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான சிறந்த கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதால் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய அபாயங்களை தவிர்ப்பதற்கும் ,போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளை பெற்றுக் கொள்ளல் எனது கருத்துக்களுக்கு அடிப்படையாகும். போதுமான தவறான வெளியீடுகளால் ஏற்படுகின்ற பாதிப்புகளை விட மோசடி மூலம் ஏற்படுகின்ற பாதிப்புகள் வலுவானதாவதுடன், உள்கூட்டுக்கள் **,**போலியான ஆவணங்கள் தயாரித்தல்**,** வேண்டுமென்றே புறக்கணித்தல் அல்லது உள்ளக நிர்வாகத்தை புறக்கணித்தல் மோசடிகள் இடம் பெறுவதற்கு காரணமாகும்.
- சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடல் அமைச்சின் உள்ளக நிர்வாகத்தில் வினைத்திறன் தொடர்பாக கருத்தை வெளியிடுவதற்கு நோக்கம் இல்லை
- வெளிப்பாடுகள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பான அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நடப்புகள் சிறந்த மற்றும் சாதாரன ரீதியில் நிதிக் கூற்றுகளில் உள்ளடங்கப்பட்டிருத்தலை மதிப்பிடல்.
- பொதுவாக நிதிக் கூற்றுமுன் வைக்கும் போது நிதிக் கூற்றுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் தொடர்பாக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நடப்புகள் சரியான முறையில் உள்ளடங்கப்பட்டுள்ளன.

எனது கணக்காய்வில் இனங் காணப்பட்ட முக்கிய கணக்காய்வுகளை கண்டுபிடித்தல் **,**பிரதான உள்ளக நிர்வாக பலவீனம் மற்றும் ஏனைய காரணங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது.

**1.5. வேறு சட்ட தேவைகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆவது பிரிவு பிரகாரம் கீழ் குறிப்பிட்ட விடயங்களை முன்வைக்கிறேன்.

**(அ)** சென்றவருடத்திற்கான நிதிகூற்றுகளை ஒழுங்கமைப்பதற்கான தேவைகள் காணப்படாததுடன் மீளாய்வு வருடத்திற்கான நிதிகூற்று சென்ற வருடத்துடன் ஒத்துள்ளது என வெளிப்படுத்த முடியாது.

**(ஆ)** அமைச்சு மூலம் சென்ற வருடத்திற்கு அமைவான நிதிக்கூற்று ஒழுங்கமைத்தலுக்கு அவசியத்தன்மை காணப்படாமையினால் நிதிக்கூற்று தொடர்பாக சிபாரிசு முன்வைக்கப்படவில்லை.

**1.6 . நிதிக்கூற்று தொடர்பாக கருத்து வழங்குதல்**

**1.6.1 கணக்குகளை முன்வைத்தல்**

அமைச்சு மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுகள் குறித்த திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு முன்வைக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|---|
| -. | 2018 ,d;; etk;gu; 21Mk; jpfjpa 267/2018 Mk; ,yf;f mur fzf;F Rw;wwpf;if gpufhuk; tUlhe;j நிதிக் கூற்று 2019 ,d; ngg;uthup 28 Mk; jpfjpf;F Kd; fzf;fha;thsuplk; Kd;itf;fg;gl Ntz;ba NghJk; epjpf; $w;Wfspd; jkpo;g; gpujp 25 ehl;fs; fhyjhkjkhdjhy; 2019 khu;r; khjk; 25 Mk; jpfjp fzf;fha;thsuplk; Kd;itf;fg;gl;lJ | 2018 இன் நவம்பர் 21ஆம் திகதிய 267 /2018 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை 9.1 பந்தியின் பிரகாரம் நிதிவெளிப்பாடு ஒழுங்கமைத்தல் மற்றும் முன்வைக்க முடியுமாக இருத்தல் | வருடாந்த நிதிக்கூற்று அறிக்கை தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தல் நடவடிக்கையானது காலதாமதமாதல் |

### 1.6.2 நிதிநிலமை கூற்று

**கீழ்க் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு/விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
| --- | --- | --- |
| 2018 ஆம் வருடத்தின் நிதி கூற்றானது நிலையான சொத்துகளின் ஆரம்ப இருப்பு கணக்கு ரூ.181,734,104 ஆனபோதும் திரைசேரி கணணி அச்சு குறிப்பு பிரகாரம் ஆரம்ப கணக்கு ரூ.150,466,027 ஆகும். மேலும் மீளாய்வு வருடத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதியானது ரூ69,481,220 ஆகும் ஆரம்ப இருப்பு கணக்கின் வித்தியாசம் மற்றும் திரைசேரி மேற்கொள்ளப்பட்ட சரிப்படுத்தலுக்கு அமைவான கூட்டுத் தொகை ரூ.31,776,671 சரி செய்யப்பட்ட கொள்வனவு ரூ.101,257,891 வீதமாக திரைசேரி அச்சு குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருந்தது | நிதி கூற்று ஒழுங்கமைத்தலின் போது இனங்காணப்பட்ட வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்பட்டு சரியான இருப்புகள் கணக்குகள் காண்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது | 2017 ஆம் வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தின் பெறுமதி 2017 ஆம் வருடத்தில் நிலையான வைப்புக்களில் உள்ளடங்கப்படாமை ஆரம்ப இருப்பு கணக்கு வித்தியாசங்களுக்கு காரணமாகும். மீளாய்வு வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காரியாலய உபகரணங்களின் பெறுமதியானது நிதி கூற்றுகளில் உள்ளடங்கப்படாமை இந்த வேறுபாடுகளுக்கு காரணமாவதுடன் அதனை சரிப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கபப்ட்டுள்ளது. |

1.6.3. நிதிப்பாய்ச்சல் கூற்று

கீழ்க் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு/விதர்ப்புரை | பிரதானகணக்கீட்டு உத்தியோகத்தர் கருத்து வெளியிடல் |
|---|---|---|---|
| (அ) | முற்கொடுப்பனவு கணக்கின் ரசீதுகளில் காட்டப்பட்டுள்ளதன் படி ரூ.14,618,027 இருப்பு கணக்குகளில் ரூ.4,564,153 குறுக்கு குறிப்பு பெறுமதி உள்ளடங்கப்பட்டிருந்தது. | நிதிப்பாய்ச்சல் கூற்று ஒழுங்கமைக்கும் போது சரியான நிதிப் பெறுமதி இனங்காணப்படல் | நிதிபாய்ச்சல் கூற்று ஒழுங்கமைத்தல் தொடர்பாக அறிவு அல்லது பயிற்சி பெற்றிறுக்கவில்லைஎன்பதுடன் நிதிபாய்ச்சல் .ஒழுங்கமைப்பதற்கு குறிப்பிட்டகாலம் இருந்தது என்பதுடன் இனிவரும் காலங்களில் தவறுகளை குறைக்கும் விதத்தில் நிதிபாய்ச்சல் கூற்று ஒழுங்கமைக்கப்படும் |
| (ஆ | நிதிசெயலாற்றுகை கூற்றில் இடம் பெறும் ரூ.8,022,951 வரி இல்லாத வருமானம் மற்றும் வேறு வருமானங்களின் பெறுமதி நிதிபாய்ச்சல் கூற்றில் உள்ளடங்கப்படவில்லை | மேற்படி | மேற்படி |
| (இ) | வேறு அமைச்சுக்கள் மூலம் கிடைக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மூலமான மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகள் முறையே ரூ.5,266,270 மற்றும் ரூ.605,796 தொகை நிதிபாய்ச்சல் கூற்றில் | மேற்படி | மேற்படி |
| (ஈ | நிதிசெயலாற்றுகை கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தரூ.491,106 வைப்புச் செய்யப்பட்டிருந்தமீள் கொடுப்பனவுசெய்யப்படவேண்டிய நிதிப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்படவில்லை | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அரச உத்தியோகத்தர்களின் முற்கொடுப்பனவு கணக்கு நடவடிக்கைகள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூ.10,053,874 பெறுமதி மற்றும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூ.17,503,826 பெறுமதி முதலீட்டு செயற்பாடுகளின் உருவாக்கப்பட்ட தேரிய நிதிநிதிப் பாய்ச்சல் கூற்றில் சரி செய்யப்பட்டிருக்கவில்லை | அரச உத்தியோகத்தர்களின் முற் கொடுப்பனவு பெறுதல் மற்றும் வட்டி இமுதலீட்டு செயற்பாடுகளின் உருவாக்கப்பட்ட தேரிய நிதிநிதிப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்படவேண்டும் | மேற்படி |

**1.6.4. அரச உத்தியோகத்தர்களுக்கான முற்கொடுப்பனவு கணக்கு தொடர்பாக இணைக்கல் கூற்று**

---

கீழ்க் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு/விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|---|
| (அ) | 2018 இன் செலுத்தப்படாத முற்பண இருப்பு கணக்குகீழ் 2017 ஆம் வருடத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் வசூழிக்கப்பட வேண்டிய ரூ.279,878 கடன் தொகை தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை | சட்டவிதி முறை ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற் கொண்டு கடன் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் . | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சிற்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் தொகையை தீர்ப்பதற்கு அந்த அமைச்சுடன் தொடர்பு கொண்டு தீர்த்துக் கொள்ளுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சேவை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் நான்கு நபர்களிடம் வசூலிக்கவேண்டிய 5 வருடங்களுக்கு மேற்பட்ட கூட்டுத் தொகையான ரூ.242,820 கூடிய கடன் தொகையினை மீளாய்வு வருடத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தாமதமின்றி கடன் தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல். | இரண்டு ஊழியர்களினது கடன் தொகையை வசூழிப்பதற்கு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதுடன் ஒரு உத்தியோகத்தர் தொடர்பாக தகவல்கள் இல்லாமையினால் அந்த கணக்குதொகையை புத்தகத்தில் இருந்து நீக்குவதற்கு செயலளரின் அனுமதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. |

**1.6.5 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

---

**அமைச்சு மூலம் கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் பேணப்படாமைதொடர்பாகமாதிரிதணிக்கை கணக்காய்வுகளில் அவதானிக்கப்பட்டன.**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு/விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|
| **(அ) சாட்சி ஆவணங்கள்** | | |
| நிதிப் பிரமாணம் 891 (1) பிரகாரம் சாட்சி வைக்கக்கூடிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய சாட்சி ஆவணங்கள் ஒழுங்கமைக்கப்படாதிருத்தல் | நிதிப் பிரமாணம் 891 (1) குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடங்கும் வகையில் சாட்சி வைக்கக்கூடிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக சாட்சிஆவணங்கள் பேணப்படுதல் | சாட்சி ஆவணங்கள் பேனுமாறு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது |

**(ஆ) மின் உபகரணங்கள் தொடர்பான ஆவணங்கள்**

| | | |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 454 (2) இன் படி மின் உபகரணங்கள் தொடர்பான ஆவணங்கள் பேணப்படாமை | நிதிப் பிரமாணம் 454 (2) இல் குறிப்பிடப்பட்டதன் குறிப்பிடப்பட்டதன் படி அரச கட்டிடங்களில் அனைத்து மின் அழுத்திகள் மற்றும் மின் உபகரணங்கள் தொடர்பாக உபகரணங்கள் அடங்கிய ஆவண புத்தகத்தை நடைமுறைப்படுத்துதல் | ஆவணத்தினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் இற்றைப் படுத்தலுக்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |

**(இ) பாதிப்புகள் தொடர்பான ஆவணங்கள்**

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் படி பாதிப்பகள் தொடர்பான ஆவணங்கள் இற்றைப் படுத்தப்படவில்லை | நிதிப் பிரமாணம் சட்டவிதி முறைகள் 110 இன் கீழ் உள்ள கட்டமைப்பின் பிரகாரம் பாதிப்புகள் தொடர்பான ஆவணங்களை இற்றைப்படுத்தல் மூலம் நடை முறைப்படுத்துதல் | மேற்படி |

### 1.6.6. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மூலம் நடைமுறைப்படுத்தவேண்டிய உறுதிப்படுத்துதல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் சட்டவிதிமுறை ஏற்பாடுகளுக்கு ஏற்ப பிரதான கணக்கீட்டு அதிகாரி மூலம் கீழ்க் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அதன் படி நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
| --- | --- | --- |
| அமைச்சின் நிதி நிர்வகிப்பதற்கான சிறந்த உள்ளக நிர்வாக கட்டமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தி வருவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப் படுத்தப்பட வேண்டியதுடன் அந்த கட்டமைப்பின் சிறப்புத் தன்மை தொடர்பாக முன்னைய மீளாய்வு செய்யப்பட்டு அதற்கேற்ப அந்த கட்டமைப்பை சிறந்தமுறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மாற்றங்கள் மேற் கொள்ளப்பட வேண்டும். அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் குறிப்பிட்டு அதன் பிரதி கணக்காய்வாளருக்கு முன் வைக்கப்பட்டபோதும் அவ்வாறான மீளாய்வு ஒன்று இடம் பெற்றது என்பதற்கான கூற்று எதுவும் கணக்காய்வுக்கு முன் வைக்கப்படவில்லை | 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் சட்டவிதிமுறைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும; | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு மூலம் உள்ளக நிர்வாக கட்டமைப்பு மீளாய்வு செய்வதுடன் நடைமுறையில் உள்ள உள்ளக நிர்வாக முறைமையை மேலும் வலுப்படுத்துவதன் அவசியம் தொடர்பாக குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |

### 1.6.7. சட்டவிதிமுறைகள் மற்றும் பிரமாணங்களுக்குஅமைவாக இல்லாமை

நியதிக் கணக்காய்வுகளில் மேற்பார்வைக்குட்பட்ட சட்ட விதிமுறைகள் பிரமான ஏற்பாடுகளுக்கு அமைவாக அல்லாத சந்தர்ப்பங்கள் கீழ் குறிப்பிடப்பட்டதன் படி விளக்க மளிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|---|---|
| | rl;ljpl;lgpukhdq ;fSf;fhd gw;wpa Fwpg;Gfs; | ,zf;fk; ,y;yhik | | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாண அறிக்கை** | | | |
| (i) | epjpg; gpukhzk; 104 (3) | 02 வாகனங்கள் தொடர்பாக இடம் பெற்ற 03 விபத்துகள் தொடர்பாக கணக்காய்வு திகதியாகும் வரையும் ஆரம்ப அறிக்கை அனுப்பப்படவில்லை | பாதிப்புகள் ஏற்பட்டவுடன் அதன் அளவு மற்றும் அதற்கான காரணங்கள் உறுதிப்படுத்துல் மற்றும் அதற்கு பொறுப்புக் கூறுபவர்களை இனங் கண்டு பரிசோதனை ஆரம்பித்தல் | விபத்து தொடர்பான ஆரம்ப அறிக்கை 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி நிதி அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| (ii) | epjpg; gpukhzk; 1646 | ஒன்றிணைந்த வாகனங்கள் 26 தொடர்பாக 2018 ஜுன் மாதம் முதல் டிசம்பர் வரை தொடர்ச்சியான ஓட்ட குறிப்பு கணக்காய்வுக்கு குறிப்பிடப்படவில்லை | பிரமானப் படி குறிப்பிட்ட காலத்தில் ஓட்ட குறிப்பு கணக்காய்வுக்கு முன்வைக்க முடியுமாக இருத்தல் | வாகன ஓட்ட குறிப்புபுத்தகம் இற்றைப் படுத்தப்பட்டு குறிப்பிட்ட காலத்திற்குள் கணக்காய்வு தொடர்பாக முன்வைப்பதற்கு அதிகாரிகளுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.3 ஆம் பந்தி | சுற்றறிக்கை கட்டமைப்புக்கு அமைவாக போக்கு வரத்து சேவை தொடர்பாக அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | சுற்றறிக்கைக்கு அமைவாக அறிக்கை பேணப்படல் வேண்டும் | ,து வரையும் போக்குவரத்து சேவை தொடர்பாக ஆவணம் தயாரிக்கப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டு தொடர்ந்து பேனுதல் |
| (இ) | 2017 ஜுன் 28 ஆம் திகதிய 01/2017 ஆம் இலக்க அரச கணக்கு திணைக்களத்தின் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை | மீளாய்வு வருடத்தின் முடிவில்<br><br>ரூ251,215,324 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக கொண்ட்ரோலர் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | நிலையான சொத்து தொடர்பாக சரியான தகவல்கள் கொண்ட்ரோலர் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் | 2018 திசெம்பர் மாதம் வரை நிலையான சொத்துக்கள் தொடர்பான விடயங்கள் கணணியில் உள்ளடங்கப்பட்டுள்ளதால் கொண்ட்ரோலர் பணிப்பாளர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க முடியாமல் போனது |

2. **நிதிமீளாய்வு**

**-----------------------------------------**

**2.1 செலவு முகாமைத்துவம்**

**கீழ்க் குறிப்பிடப்பட்டஅவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டது**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|
| (அ) நிதி மூலதன செலவுகள் 3 க்காக ஏற்படுத்தப்பட்ட ரூ.1.80 மில்லியன் முழு மொத்த தேரிய ஒதுக்கமும் பாவிக்கப்படாமல் எஞ்சியிருந்தது | நிதிப் பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்டுள்ள சட்டஏற்பாடுகள் நிறைவேற்றப்படும் வகையில் வருடாந்த செலவு விபர மதிப்பீடு ஒழுங்கமைக்கப்பட | கோரப்பட்டுள்ளதற்கேற்ப முற்பணம் கிடைக்காமையே ஏனைய காலங்களில் காரணமாக இருக்கலாம். |
| (ஆ) மீண்டுவரும் செலவு விடயங்கள் 05 க்கான ஏற்படுத்தப்பட்ட ரூ.14.71 மில்லியன் முழு மொத்த தேரிய ஒதுக்கத்தின் மொத்தம் ரூ.11.17 மில்லியன் மட்டுமே உபயோகித்ததனால் ரூ.3.54 மில்லியன் எஞ்சியிருந்தன. அந்த எஞ்சிய தொகையானது மொத்த ஒதுக்கீடுகளின் நூற்றுக்கு 22 முதல் நூற்றுக்கு 99 வரையான வரம்புக்குட்பட்ட அளவாக இருந்தது | | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போதல் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாமையினால் மற்றும் சபரகமுவ மாகாண மத்திய நிலையம் மூடப்பட்டமை போன்ற காரணங்களினால் மீண்டுவரும் ஒதுக்கீடுகள் எஞ்சியுள்ளன |

| | | |
|---|---|---|
| (இ) மூலதன செலவு விடயங்கள் 09 க்கான ஏற்படுத்தப்பட்ட ரூ.294.60 மில்லியன் முழு மொத்த தேரிய ஒதுக்கத்தின் மொத்தம் ரூ.182.68 மில்லியன் மட்டுமே உபயோகிக்கப்பட்டமையினால் ரூ.111.92 மில்லியன் எஞ்சியிருந்தன. அந்த எஞ்சிய தொகையானது மொத்த ஒதுக்கீடுகளின் நூற்றுக்கு 20முதல் நூற்றுக்கு76 வரையான வரம்புக்குட்பட்ட அளவாக இருந்தது | மேற்படி | வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான காரியாலய உபகரணம் பெற்றுக் கொள்வதற்கு முற்பணம் கிடைக்காமை மற்றும் அமைச்சின் கீழ் உள்ள வேறு நிறுவனங்களுக்கான முற்பணம் கிடைக்காமை மற்றும் புதிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்களினால் நிதி எஞ்சியுள்ளது. |

**2.2. பொறுப்புகள் மற்றும் உடன்பாடுகளுக்குஉள்ளாதல்**

**கீழ்க் குறிப்பிடப்பட்டஅவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|
| தேசிய மொழிக் கல்விமற்றும் பயிற்சி நிறுவனத்தின் நிதி வெளியீடுகளுக்குஅமைய 2018 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு அமைச்சுக்கு கிடைக்க வேண்டிய பணம் ரூ.14.20 மில்லியனாககாட்டப்பட்டது. இருந்தும் அமைச்சின் பொறுப்பு வெளியீடுகளுக்கு அமைவாக அந்த தொகை ரூ 2.22 மில்லியன் குறைவாக ரூ.11.97 மில்லியனாககாட்டப்பட்டது. | அரச கணக்கு சுற்றறிக்கை விதிஏற்பாடுகளுக்கு அமைவாக பொறுப்புகள் மற்றும் கடமைகள் தொடர்பாக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருத்தல் | முன்னைய ஆண்டிகான கடமை திரைசேரி செயற்படுத்தல் திணைக்களம் மூலம் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியிருந்ததுடன் அண்ணலவாக எஞ்சிய ஒதுக்கீட்டு தொகை பற்றாக காட்டுவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. |

## 3. நெறிப்படுத்தல் மீளாய்வு

---------------------------------------

### 3.1 .கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம்

**கீழ்க் குறிப்பிடப்பட்டஅவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
|---|---|---|
| சகவாழ்வுச் சங்கங்களுக்கு வினியோகிப்பதற்காக 2017 திசெம்பர் 29 ஆம் திகதி 7500 கதிரைகள் கொள்வனவு செய்யப் பட்டிருந்தன.ரூ.561,104 பெறுமதியான 775 கதிரைகள் 2019 மே மாதம் 27 ஆம் திகதி வரை வினியோகிக்கப்படாமல் எஞ்சியிருந்தன | திட்டமிடப்பட்ட காலத்திற்குள் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு முடிவுறுத்தப்படல் வேண்டும் | 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற பிரச்சினைக்குறிய சுழலில் எஞ்சியுள்ள கதிரைகளை வினியோகிக்க முடியாமல் போனதுடன் எதிர்வரும் மாதங்களில் அந்த கதிரைகளை சகவாழ்வுச் சங்கங்களுக்கு வினியோகிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளன. |

### 3.2. நட்டம் மற்றும் பாதிப்புக்கள்

**கீழ்க் குறிப்பிடப்பட்டஅவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
| --- | --- | --- |
| (அ) 2018 ஜுலை மாதம் 01 ஆம் திகதி விபத்துக்குள்ளாகிய மிட்சுபிஸி டபள் கெப் என்ற வாகனம் 2019 மே மாதம் வரை புதுபித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளாது பிரதிநிதிப்படுத்தும் நிறுவனத்தின் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. இந்த விபத்து தொடர்பாக விரைவாக அடிப்படை ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் இடம் பெற்ற நட்டத்தினை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கை | வாகன விபத்து தொடர்பாக பொறுப்பளிக்க வேண்டிய பங்குதாரர்களை இணங்கண்டு நட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கு ஏற்றால் போல நிதிப் பிரமாண கோவைக்கு ஏற்ப ஆய்வுகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருத்தல் | வாகனத்தின் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு அவசியமான air bag மற்றும் இருக்கைப்படி என்பன ஜேர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்படும் வரை புதுப்பித்தல் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு காலம் செல்லலாம்; |

(M) 2018 ஒக்தோம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரூ.32.7 மில்லியன் பெறுமதியுடைய BMW வர்க்கமோட்டார் வாகனம் முதலாவது பயணத்தின் போது அதன் டயர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பினால் ரூ.570,296 செலவு செய்து 2018 திசெம்பர் மாதம் பிரதிநிதிப்படுத்தும் நிறுவனம் மூலம் புதுப்பிக்கப்பட்டிருந்தன.2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மீண்டும் பயண நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது வாகனத்திற்கான குறிப்பிட்ட எரிபொருள் பாவிப்பதற்கு பதிலாக வேறு எரிபொருள் வர்க்கம் பாவிக்கப்பட்டதனால் இடம் பெற்ற பாதிப்பினை புதுப்பித்தலுக்காக 2019 மே மாதத்தில் ரூ 1.08 .மில்லியன் செலவு செய்யப்பட்டது. இந்த இரண்டு வித புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு அமைவான நிகழ்வுகளுக்கும் தற்காலிகமாக நியமனம் பெற்ற 2 உத்தியோகத்தர்கள் மூலம் இடம் பெற்றன என அறியப்பட்டுள்ளன

வுாகன விபத்து அல்லது பாதிப்பு ஏற்பட்டமை தொடர்பாக நிதிப் பிரமாணப் பிரகாரம் விரைவாக பரிசோதனை மேற்கொண்டு நட்டத்தினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருத்தல்

இந்த பாதிப்புக்கு அமைவாக ஆரம்ப அறிக்கை ஒழுங்கமைத்து அனுப்பப்பட்டுள்ளது.அந்த மோட்டார் வாகனம் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதுஎ ன்பதுடன் புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக மதிப்பிடப்பட்ட தொகை ரூ.1,089,788 ஆகும். இது தொடர்பாக பொறுப்பளிக்க வேண்டிய வகுதியினரிடம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளன.

## 4. மனித வள முகாமைத்துவம்

**கீழ்க் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன**

| கணக்காய்வு அவதானிப்பு | சிபாரிசு /விதர்ப்புரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து வெளியிடல் |
| --- | --- | --- |
| தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர் சேவையின் III ஆம் தரத்திற்கான 110 உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்காக 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளுக்காக ரூ.3.47 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தன. 2019 மே மாதம் 28 ஆம் திகதி வரையும் ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. | அத்தியாவசியமான பதவிகளுக்காக இணைத்துக் கொள்வதை துரிதப்படுத்துதல; | தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர் பரீட்சையின் எழுத்துப்பரீட்சை பகுதியானது 2018 செப்டெம்பர் 16 ஆம் திகதியும் வாய்மூலப் பரீட்சை 2019 பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதியும் இடம்பெற்றதுடன் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |